பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

27 03 2025 **THURSDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. கூட்டுறவு டாக்ஸி சேவை விரைவில் தொடங்கப்படவுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா அறிவித்துள்ளார்.

2. விமான எரிபொருளுக்கான மதிப்புக்கூட்டு வரியை மாநில அரசுகள் குறைக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

3. சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பட்டா வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

4. திமுகவுக்கு எதிரான நிலைப்பாடு கொண்டுள்ள ஒத்த கருத்துடைய கட்சிகளுடன் சட்டப்பேரவை தேர்தலின்போது கூட்டணி அமைக்கப்படும் என்று அஇஅதிமுக கூறியுள்ளது.

5. ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Reetika Hooda** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>><<<<<<**

கூட்டுறவுத்துறை மூலம் டாக்ஸி சேவை விரைவில் தொடங்கப்படவுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா அறிவித்துள்ளார்.

இன்று மக்களவையில் இதனை தெரிவித்த அவர், அடுத்த சில மாதங்களுக்குள் கூட்டுறவு டாக்ஸி சேவை தொடங்கப்படும் என்றார்.

இதற்கான கைபேசி செயலியில் இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்களை பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனை செயல்படுத்துவதற்காக கடந்த மூன்றரை ஆண்டுகளாக இரவு பகல் பாராமல் அதிகாரிகள் பணியாற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

கூட்டுறவு காப்பீட்டு நிறுவனம் ஒன்றும் ஏற்படுத்தப்படவுள்ளதாக திரு. அமித் ஷா அறிவித்தார்.

>>>>>><<<<<<

விமான எரிபொருள் மீதான மதிப்புக்கூட்டு வரியை குறைக்குமாறு மாநில அரசுகளுக்கு கடிதம் எழுதியுள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், அதிகபட்சமாக தமிழகத்தில் தான் 29 சதவீதம் அளவிற்கு வரி விதிக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

சில மாநிலங்களில் இந்த வரிவிதிப்பு 5 சதவீதத்திற்கு குறைவாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

விமான கட்டணங்களை நிர்ணயம் செய்வதில் 45 சதவீத பங்கு, எரிபொருள் விலையை சார்ந்ததாகும் என்றும் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஒரே நாடு - ஒரே தேர்தல் நடைமுறை தொடர்பான கருத்துக்களை உறுப்பினர்கள், நாடாளுமன்றக் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

இன்று மக்களவையில் இதனை தெரிவித்த அவர், பல்வேறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை தம்மிடம் தெரிவித்ததாக கூறினார்.

குறிப்பாக இளைய உறுப்பினர்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை தம்மிடம் தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவற்றை நாடாளுமன்ற குழுவிடம் தெரிவிக்குமாறு திரு. ஓம் பிர்லா வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பட்டா வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று பேரவையில் இளையோர் நலன் மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்தின் போது குறுக்கிட்டுப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பாக அதிகாரிகளுடன் உரிய ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு, பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

திமுகவுக்கு எதிரான நிலைப்பாடு கொண்டுள்ள ஒத்த கருத்துடைய கட்சிகளுடன் சட்டப்பேரவை தேர்தலின்போது கூட்டணி அமைக்கப்படும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று அவர் மீண்டும் குற்றம் சாட்டினார்.

போதைப்பொருள் புழக்கம் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<<

மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களின் கவனத்தை திசைதிருப்பும் நோக்கில் திமுக மொழிப்பிரச்சினையை கையில் எடுத்துள்ளதாக குறை கூறினார்.

>>>>>><<<<<<

மத்திய அரசை எதிர்க்க வேறு வழியில்லாமல் திமுக மொழியை வைத்து அரசியல் செய்வதாக புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

தேனியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய கல்விக்கொள்கை அறிஞர்களால் உருவாக்கப்பட்டது என்றார்.

மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக எந்தவொரு அறிவிப்பும் வெளிவராதபோது, திமுக அதுகுறித்து பேசுவது அரசியல் ஆதாயத்திற்காகத்தான் என்றும் திரு. கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நாகை மாவட்டம், அகஸ்தியம்பள்ளி – திருவாரூர் இடையேயான மின்மயமாக்கப்பட்ட ரயில் வழித்தடத்தில் சோதனை ஓட்டம் இன்று நடைபெற்றது.

இந்த மின் பாதை வழித்தடத்தில் 120 கிலோமீட்டர் வேகத்தில் சோதனை ஓட்டம் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

சர்வதேச மேடை நாடக தினம் இன்று கொண்டாடப ்பட்டது.

மக்களிடம் நல்ல கருத்துக்களை கொண்டு சேர்ப்பதில் நாடக கலைஞர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த நாடக நடிகர் சங்கத்தலைவர் திரு. சிங்காரவேலன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - சிங்காரவேலன் 30 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு. தென்காசி மாவட்டம், பாவூர்சத்திரத்தில் உள்ள கால்நடைச் சந்தையில் விற்பனை களைகட்டியுள்ளது.

இதன் காரணமாக 2 கோடி ரூபாய்க்கும் கூடுதலாக வியாபாரம் நடைபெற்றதாகவும், வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செந்தில் 36 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 35 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை அருகே குட்டையில் விழுந்த காட்டு யானையை வனத்துறையினர் பாதுகாப்பாக மீட்டனர்.

>>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்டம், கல்லடிமாமூடு பகுதியில் மினி விளையாட்டரங்கம் அமைக்கும் பணியினை ஆட்சியர் திருமதி. அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான கல்வி சுற்றுலா வாகனத்தை ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் பயிர் ரகங்கள் மற்றும் உழவர்களின் உரிமை பாதுகாப்புச் சட்டம் குறித்த இரண்டு நாள் விழிப்புணர்வு பயிலரங்கம் இன்று தொடங்கியது.

>>>>>><<<<<<

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் அருகே வனப்பகுதியில் புலி தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Reetika Hooda** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 76 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் ஜப்பானின் **Nodoka Yamamoto** –வை வென்றார்.

**>>>>>><<<<<<**

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Akash Pal – Poymantee Baisya** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, ஆஸ்திரேலியாவின் **Nicholaslum -** சிங்கப்பூரின் **Zeng Jian** இணையை 11-6, 11-7, 11-8 என்ற செட்கணக்கில் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவில் **Diya Chitale – Yashaswini Ghorpade** இணையும் காலிறுதிக்கு முன்னேறியது.

**>>>>>><<<<<<**

கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று புதுதில்லியில் நிறைவடைந்தன.

**>>>>>><<<<<<**

ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச்சுற்றுப் போட்டியில் இந்தியா, தாய்லாந்து, மங்கோலியா, ஈராக் மற்றும் **Timor Leste** அணிகள் ஒரே பிரிவில் இடம்பெற்றுள்ளன.

ஆசிய கோப்பை மூவர் கூடைப்பந்து போட்டியில் பங்கேற்க இந்தியா தகுதி பெற்றுள்ளது.

**>>>>>>END<<<<<<**